**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற அவசரக்கூட்டம்**
**நாள். 15.03.2024 வெள்ளிக்கிழமை நேரம் – பிற்பகல் 3.00 மணி**

---

**மன்றப்பொருள்–1**

அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆகியோர் தலைமையில் 28.11.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள 7 ஏக்கர் 85 செண்ட் நிலத்தை நகராட்சி வசம் ஒப்படைக்க முடிவுகள் எடுக்கப்பட்டது.

மேற்படி முடிவுகளின்படி அரசாணை (2ப) எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5(1)) துறை நாள் 01.03.2024–இல் ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை (7 ஏக்கர் 85 செண்ட் நிலம்) நகராட்சி வசம் ஒப்படைக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை (2ப) எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள். 01.03.2024 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க எண் 1507/1995/ இ1 )

**தீர்மானம் எண்.638**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

Special Assistance to states for capital investment for the year 2023–24 –இன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 29.02.2024 அன்று அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம்/ வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| Special Assistance to states for capital investment for the year 2023–24 | | | | |
| 1 | வார்டு எண் 12 உழவர் சந்தை அருகில் முழு நேர நூலக இணைப்பு கட்டிட பணிகள் | ரூ.22.00/– | M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.14% அதிகம் |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்த்தாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 4.04% அதிகம் |

M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை காட்டிலும் 0.01% குறைவு என விலைவிகிதம் குறைப்பு செய்து சம்மத கடிதம் வழங்கியுள்ளதன் அடிப்படையில் அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.314/2024/இ1)

**தீர்மானம் எண்.639**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–3</u>**

15–வது மத்திய நிதிக்குழு மானியத் திட்டம் 2024–25–இன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 23.02.2024 அன்று அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எ.** | **திட்டம்/ வேலையின் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைவிகிதம்** |
|---|---|---|---|---|
| **15வது மத்திய நிதிக்குழு மானியத் திட்டம் 2024–25 (Untied)** | | | | |
| 1 | **<u>சிப்பம்–2</u>**<br>தார் சாலை அமைக்கும் பணிகள் (3 எண்ணம் சாலைகள்) 1. (**119002R012**) ஹவுசிங் போர்டு காலணி,<br>2. (**119012R054**) டி.இ.ஓ அலுவலக தெரு,<br>3.**119012R057** டி.இ.ஓ அலுவலக தெரு | ரூ.22.00/– | M/s எம்.பி.எம் பில்டர்ஸ், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.08% குறைவு |
| | | | திரு.ஆர்.சதிஷ், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 1.83% மிக குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சிப்பம் 2–க்கான பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் மிக குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்த திரு.ஆர்.சதிஷ், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2320/2023/இ1)

**தீர்மானம் எண்.640**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–4</u>**

15வது மத்திய நிதிக்குழு மானியத்திட்டம் 2022 – 2023 –இன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 29.02.2024 அன்று அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எ.** | **திட்டம்/ வேலையின் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைவிகிதம்** |
|---|---|---|---|---|
| 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் 2022–23 (Tied Grant) | | | | |
| 1 | Supply and delivery of Submersible motors, UPVC Column Pipes, Cables for mini Power Pumps in Usilampatti | ரூ.11.18/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.02% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | Municipality | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்த்தாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.75 % அதிகம் |

| 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் 2022–23 (Untied Grant) | | | | |
|---|---|---|---|---|
| 2 | Providing D system pipeline arrangements in municipal limit extension areas @ Usilampatti municipality | ரூ.7.66/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.07% குறைவு |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்த்தாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 5.89% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.195/2024/இ1)

**தீர்மானம் எண்.641**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–5</u>

15–வது மத்திய நிதிக்குழு மானியத்திட்டம் (Untied) 2021–22 –இன் கீழ் நகராட்சி விரிவாக்க பகுதியில் புதிதாக 100 எண்ணம் LED தெரு மின் விளக்குகள் பொருத்தும் பணி ரூ.5.08/– (இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகர்மன்ற உறுப்பினர்களால் அவரவர் வார்டு பகுதியில் புதிதாக தெருமின் விளக்குகள் பொருத்த தெரிவிக்கப்பட்ட இடங்களில் மின் இணைப்பு பெற உரிய வரைபடம் தயார் செய்யப்பட்டு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மின்சார வாரியம் கேட்பு தொகையாக ரூ.9,21,2403/– செலுத்துமாறு கேட்பு அறிவிப்பு வழங்கியுள்ளது.

மேற்படி அரசின் திட்டப்பணியினை செயல்படுத்த வேண்டியதன் அவசர அவசியம் கருதி மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கேட்பு தொகை ரூ. 10,17,418/– (மின்சார வாரிய கேட்பு தொகை ரூ.9,21,243/– மற்றும் மின் இணைப்பு பெற மின்சார வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்ததற்கான விண்ணப்ப கட்டணம் ரூ.96175/–) – பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க எண் 2089/2022/ இ1)

**தீர்மானம் எண்.642**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–6</u>

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2023–2024–இன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 07.03.2024 அன்று அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எ. | திட்டம்/ வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2023-2024 | | | | |
| 1 | வார்டு எண் 14 கருக்கட்டான்பட்டி பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டிட பணிகள் | ரூ.24.96/- | M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 3.43 % அதிகம் |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்ததாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 5.10 % அதிகம் |

M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை காட்டிலும் 0.01% குறைவு என விலைவிகிதம் குறைப்பு செய்து சம்மத கடிதம் வழங்கியுள்ளதன் அடிப்படையில் அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2492/2023/இ1)

**தீர்மானம் எண்.643**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-7</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2023-2024-ஆம் ஆண்டிற்கான பொதுநிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 26.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம்/ வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | தேனி பிரதான சாலை ஓரமாக அமைந்துள்ள இரண்டு எண்ணம் உயர்மின் கோபுர விளக்கினை வார்டு எண் 24 கவண்டன்பட்டி மந்தை பகுதி மற்றும் வார்டு எண் 4 எஸ்.ஓ.ஆர் நகர் பகுதியில் மாற்றியமைக்கும் பணி | ரூ. 2.50 /- | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை காட்டிலும் 0.16 % குறைவு |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்ததாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 1.08 % அதிகம் |
| 2 | உசிலம்பட்டி நகராட்சி அலுவலக நகர்மன்ற கூட்டரங்கு மராமத்து பணி மேற்கொள்ளுதல் | ரூ. 3.00 /- | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை காட்டிலும் 0.06 % குறைவு |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்ததாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 1.54% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைத்தல் மற்றும் நகர்மன்ற தலைவர் அறைக்கு அருகில் உள்ள கழிப்பறை மராமத்து பணி மேற்கொள்ளுதல் | ரூ. 2.50 /– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை காட்டிலும் 0.13% குறைவு |
| | | | M/s சுஜி இன்பரா, ஒப்பந்ததாரர், உசிலம்பட்டி | மதிப்பீட்டை காட்டிலும் 0.62% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தபுளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.எஸ்.ஈஸ்வரன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1607/2023/இ1, 348 மற்றும் 349 /2024/இ1 )

**தீர்மானம் எண்.644**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–8</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ணம் சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடை காலமாக இருப்பதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.4.90/– (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 950/2023/ இ1)

**தீர்மானம் எண்.645**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–9</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையம் இந்நகராட்சியிலிருந்து 23.5 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 100 எச்.பி. மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு 24 வார்டுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பிங் மெயின் அமைக்கப்பட்டுள்ள DI மற்றும் AC பைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்யும் போது ஏற்படும் அழுத்தம் காரணமாக உடைப்பு ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே கோடை காலங்களில் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி பழுதுகளை சரிசெய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.4.80/– (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.949/2023/இ1)

**தீர்மானம் எண்.646**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–10</u>

வைகை பிரத்யோக குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 4.00 முதல் 4.50 MLD அளவு குடிநீர் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றம் செய்து 01 முதல் 24 வார்டுகளுக்கும் நகராட்சி பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழைய பகிர்மான குழாய்களில் நீர் அழுத்தம் காரணமாக உடைப்பு ஏற்படுகிறது. மேலும் மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலைகளின் இருபுறம் (பி.ஆர்.சி செட் முதல் தேனி சாலை சுண்ணாம்பு காளவாசல் வரை) சுமார் 5.00 கீ.மீ நீளத்திற்கு (வடக்கு மற்றும் தெற்கு) மழைநீர் வடிகால் அமைத்து சாலைகள் அகலப்படுத்தும் பணி மாநில நெடுஞ்சாலை துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலைகள் அகலப்படுத்தும் பணியின் போது இந்நகராட்சி குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களை சாலையின் அருகில் மாற்றம் செய்யாமல் பணி மேற்கொள்வதால் பிரதான குடிநீர் குழாய் மற்றும் பகிர்மான குழாய்கள் சேதமடைந்துள்ளது. எனவே மேற்படி உடைப்புகள் மற்றும் வால்வுகளை பழுதுநீக்கம் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.4.90 /– (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.951/2023/இ1)

**தீர்மானம் எண்.647**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–11</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல், குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு தனியார் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறைக்கு வர உள்ளதால் மேற்படி ஒப்பந்த காலம் 31.05.2024 உடன் முடிவடைவதால் ஜீன் 2024 முதல் அக்டோபர் 2024 வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பு பணிகளுக்கு தனியார் மூலம் குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள் விநியோகம் செய்யவும் அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00/– இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2098/2023/இ1)

**தீர்மானம் எண்.648**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–12</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் 9 எண்ணம் சுத்தம் செய்யவும், நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை கண்காணிக்கவும், மின் மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத

காலத்திற்கு தனியார் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறைக்கு வர உள்ளதால் மேற்படி ஒப்பந்தகாலம் 31.05.2024 உடன் முடிவடைவதால் ஜீன் 2024 முதல் அக்டோபர் 2024 வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பு பணிகளுக்கு தனியார் மூலம் குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள் விநியோகம் செய்யவும் அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00/– இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2109/2023/இ1)

**தீர்மானம் எண்.649**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–13</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும் போர்வெல் அமைந்துள்ள இடங்களில் மின் மோட்டார் இயக்குதல் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு தனியார் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடைமுறைக்கு வர உள்ளதால் மேற்படி ஒப்பந்த காலம் 31.05.2024 உடன் முடிவடைவதால் ஜீன் 2024 முதல் அக்டோபர் 2024 வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பு பணிகளுக்கு தனியார் மூலம் குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள் விநியோகம் செய்யவும் அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00/– (இலட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2141/2023/இ1)

**தீர்மானம் எண்.650**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–14</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், ஆதி வழக்கம் போல் கொண்டாடப்படும் பாப்பாபட்டி அருள்மிகு ஒச்சாண்டம்மன் கோவில் மாசிப்பச்சை திருவிழாவினை முன்னிட்டு மதுரை ரோடு எட்டுப்பட்டரை கோவில், வத்தலக்குண்டு ரோட்டில் உள்ள அம்மச்சி அம்மன் கோவில், அன்னம்பாரிபட்டி சாவடி மற்றும் வடகாட்டுப்பட்டி ஆகிய வளாகப் பகுதிகளை கிருமி நாசினிகள் கொண்டு சுத்தம் செய்து கொட்டகை அமைக்கவும், 10.03.2024–ம் தேதி அருள்மிகு ஒச்சாண்டம்மன் கோவில் பெட்டி, உசிலம்பட்டி கருப்பு கோவில் வருவதால் S.O.R நகர் வத்தலக்குண்டு சாலையின் முன்பு நீர், மோர் பந்தல் அமைக்கவும், மற்றும் ஆணையாளர், நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் வடகாட்டுப்பட்டியில் உள்ள கோவில் பூசாரிகளுக்கு பூ மாலை மூலமாக மரியாதை செலுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு உத்தேச செவினத்தொகை ரூ.80,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

திரு விழா அவரச அவசியம் கருதி நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0413/2024/எச்.1)

**தீர்மானம் எண்.651**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–15**

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு 24, கவண்டன்பட்டியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தின் நச்சுதொட்டி நிரம்பி கழிவுநீர் வெளியேறுவதை தனியார் வாகனம் மூலம் அகற்றவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.40,000–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2837/2021/எச்.1)

**தீர்மானம் எண்.652**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–16**

உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் ஆதி வழக்கம் போல் கொண்டாடப்படும் பாப்பாபட்டி அருள்மிகு ஒச்சாண்டம்மன் கோவில் மாசிப்பச்சை திருவிழாவிற்கு தேவையான இடங்களில் கொட்டகைப் பந்தல் அமைக்கவும், பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கவும் மற்றும் பூசாரிகளுக்கு மரியாதை செலுத்துவதற்கு பூ மாலை வாங்கவும் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மொத்ததொகை.ரூ |
|---|---|---|
| 1 | A.காமாட்சி<br>மேடை பந்தல் காண்ட்ராக்டர் உசிலம்பட்டி | 76,150 /– |
| 2 | M.தங்கதுரை<br>மேடை பந்தல் காண்ட்ராக்டர் உசிலம்பட்டி | 80,000/– |
| 3 | S.மோகன்<br>மேடை பந்தல் காண்ட்ராக்டர் உசிலம்பட்டி | 81,500/– |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள A.காமாட்சி மேடை பந்தல் காண்ட்ராக்டர் உசிலம்பட்டி அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0413/2024/எச்.1)

**தீர்மானம் எண்.653**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–17**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 24 கவண்டன்பட்டி காலனி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிட கழிவுநீர் தொட்டியில் உள்ள கழிவுநீரை அகற்றுவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை.ரூ ( நடை ஒன்றிற்கு ) |
|---|---|---|
| 1 | R.P ராமன், செப்டிக் டெங்க் கிளினிக் உசிலம்பட்டி. | 3,500 /- |
| 2 | பாண்டிவீரன், செப்டிக் டெங்க் கிளினிக் உசிலம்பட்டி. | 3,800/- |
| 3 | தவம், செப்டிக் டெங்க் கிளினிக் உசிலம்பட்டி. | 4,000/- |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள R.P ராமன், செப்டிக் டெங்க் கிளினிக் உசிலம்பட்டி அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2837/2021/எச்.1)

**தீர்மானம் எண்.654**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-18</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN58BW 6145-க்கு பழுதுநீக்கம் பணி மற்றும் ஆயில் சர்வீஸ் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.19,500-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.895/2022/எச்.1)

**தீர்மானம் எண்.655**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-19</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் அறிவுரையின்படி உசிலம்பட்டி நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை இல்லாமல் வசூலிக்க தினசரி குறியீட்டு நிர்ணயம் செய்து 100 சதவிகிதம் அடையவும் வசூல் பணி துரிதப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் பிரியா ரேடியோஸ் அன் லைட்ஸ் நிறுவனம் மூலம் விளம்பர செய்த வகையில் கீழ்க்கண்ட தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

05.02.2024 முதல் 20.02.024 வரை

| | |
|---|---|
| ஆட்டோவுக்கு வாடகை (1500X16 நாட்கள்) | = ரூ. 24000 |
| ஒலிபெருக்கி வாடகை (1500X16 நாட்கள்) | = ரூ. 24000 |
| மைக் ரிக்கார்டிங் செலவு | = ரூ. 750 |
| | ----------- |
| மொத்தம் | ரூ. 48750 |
| | ---------- |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.656**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–20**

இந்நகராட்சிக்குச் சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2024–2027–ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் கீழ்க்கண்ட நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பிரசுரம் செய்யப்பட்ட நாள் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 12.01.2024 | தினசூரியன் | 14784 |
| 2 | 12.01.2024 | தினகரன் | 17640 |
| 3 | 03.02.2024 | தினபூமி | 11844 |
| 4 | 03.02.2024 | தினகரன் | 18900 |
| 5 | 20.02.2024 | தினசூரியன் | 14784 |
| 6 | 14.03.2024 | தமிழ்ச்சுடர் ESS ESS Publication | 25725 |
| | | **மொத்தம்** | **103677** |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 31/2024/அ1)

**தீர்மானம் எண்.657**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–21**

உசிலம்பட்டி நகராட்சி வைகை பிரத்யோக குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நகர்பகுதியில் சுமார் 58.67 கி.மீ குடியீர் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மேலும் உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள விரிவாக்க பகுதிகளான சுமார் 21.09 கி.மீட்டருக்கு ஏற்கனவே இந்நகராட்சியில் உள்ள பகிர்மான குழாய்களில் இணைப்பு செய்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1857/2018/ இ1)

**தீர்மானம் எண்.658**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–22**

உசிலம்பட்டி நகராட்சி 2024–2025–ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழங்கல் நிதியின் உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2340/2022/பி1)

**தீர்மானம் எண்.659**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி